ஊடக அறிவித்தல்

# அரச மற்றும் அரச சார்புத்துறை சேவையில் ஈடுபட்டுள்ளோர் தொகைமதிப்பு - 2016.

## இணையப் பக்கத்தை திறந்து வைத்தல்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தொ.இ: 94-11-2147001 தொ.ந: 94-11-2147011 இ-மெயில்: information@statistics.gov.lk**

---

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அரச மற்றும் அரச சார்புத்துறை சேவையில் ஈடுபட்டுள்ளோர் தொடர்பான தொகைமதிப்பு ஆனது 2016 நவம்பர் 17ந் திகதி நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும்.
பொதுவாக நான்கு வருடங்களுக்கொரு முறை நடாத்தப்படும் இத்தொகைமதிப்பு இம்முறை நடாத்தப்படுவது பதினொராவது தடவையாகும்.

தகவல் சேகரிக்கும் நடவடிக்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் பொருட்டு இத்தொகைமதிப்பு, சகல அரச மற்றும் அரச சார்புத் துறை சேவையில் ஈடுபட்டுள்ளோரின் பங்களிப்புடன் 2016 நவம்பர் 17ந் திகதி மு.ப 9.30 – 11.30 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்படுமென தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துக் கொள்கிறது.

அரச மற்றும் அரச சார்புத்துறை சேவையில் ஈடுபட்டுள்ளோர் சம்பந்தமான தொகைமதிப்பின் சகல தகவல்களையும் உள்ளடக்கிய ஆவணங்களை கொண்ட ஒரு இணையப்பக்கத்தினை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளிட்டதுடன் இவ் இணையப்பக்கமானது இத்திணைக்களத்தின் இணையத்தளமான www.statistics.gov.lk இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்விணையப் பக்கத்தில் தொகைமதிப்பிற்குப் பயன்படுத்தப்படும் சகல ஆவணங்களின் பிரதிகள் மற்றும் தொகைமதிப்பு வினாக்கொத்தின் சகல வினாக்களையும் நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் என்பன ஒலி, ஒளி வடிவங்களில் உள்ளடுக்கப்பட்டுள்ளதென தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

தொகைமதிப்பு சம்பந்தமாக இங்கு உள்ளடக்கப்பட்ட தகவல்களை தொகைமதிப்புத் தினத்துக்கு முன் பரிசீலித்து 2016 நவம்பர் 17ந் திகதி மு.ப 9.30 – 11.30 வரையான காலப்பகுதியில் தொகைமதிப்பு வினாக்கொத்தை சரியாகப் பூர்த்தி செய்து இத் தொகைமதிப்பை வெற்றிகரமாக மேற்கொள்ள ஒத்துழைக்குமாறு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சகல அரச மற்றும் அரச சார்புத்துறை சேவையில் ஈடுபட்டுள்ளோர்களிடம் கேட்டுக்கொள்கிறது.

------------------------------------------------------------

**கலாநிதி. ஏ. ஜே. சத்தரசிங்க**

**பணிப்பாளர் நாயகம்**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**